[1981 மார்ச் 23

## தமிழ் நாட்டில் நீர்வழிப் போக்கு வரத்துத் திட்டம்.

*வினா எண். 448—திரு. இல. பலராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைய உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்துக் கழகத்திடம் தமிழ்நாட்டில் நீர்வழி போக்குவரத்துக்கான தகுதி உள்ள திட்டம் தமிழக அரசு தந்துள்ளதா ?

(ஆ) பக்கிங்காம் கால்வாய்த் திட்டம் அல்லது கூவம் சென்னை நகரத்தில் இத் திட்டம் இயல்பட சாத்தியம் உள்ளதா என ஆராயப்பட்டதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம். வட பக்கிங்காம் கால்வாயை மைல் 10/1லிருந்து ஆந்திரமாநில எல்லை வரை மேம்படுத்துவதற்கான ரூபாய் 210 இலட்சத் திட்டமும் தென் பக்கிங்காம் கால்வாயை மைல் 1/1லிருந்து 31/0 வரை மேம்படுத்த ரூபாய் 190 இலட்சத் திட்டமும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் தற்போது சேர்க்கப்பட்டுள்ளன.

(ஆ) சென்னை நகர எல்லைக்கும், வட பக்கிங்காம் கால்வாய் மைல் 01 முதல் மைல் 10/1 வரை ரூபாய் 106 இலட்ச செலவிலே ஏற்கெனவே மேம்படுத்தப்பட்டுள்ளது. கூவம் ஆற்றை மேம்படுத்தும் பணிகளும் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டன.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கூவம் நதியிலே மக்கள் போக்குவரத்திற்காக படகு விடுவதாக ஒரு திட்டம் ஏற்கெனவே இருந்தது. அதை மறு பரிசீலனைசெய்ய அரசு முன்வருமா ? அதேபோன்று, சேது சமுத்திரத் திட்டத்தைப்பற்றி ஏதாகிலும் மத்திய வாரியத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி உள்நாட்டு நீர்ப் போக்குவரத்தைப் பற்றியது. பக்கிங்காம் கால்வாயைப் பற்றிய குறிப்பு இருக்கிறது. கூவம் ஆற்றில் படகு விடுவதைப் பற்றிக் கேட்கிறார்கள். இப்போது கடுமையான கோடைக் காலம் ஆரம்பித்திருக்கிறது. அங்கிருந்து நாற்றத்தைப் பொறுக்காமல், மனிதர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள் அதிலே படகு ஓட்ட முடியுமா என்பதைப் பற்றி யோசித்துத்தான் செய்ய வேண்டும். ஆனாலும் இது சரியாக இருக்குமா என்பதைப் பற்றி அரசு நிச்சயமாக பரிசீலனை செய்யும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் தற்போது நீர் வழி படகுப் போக்குவரத்து நடைபெறுகிறதா ? கூவத்திலே விடப்பட்ட படகு ஓடுகிறதா? அல்லது மூழ்கிவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 மார்ச் 23]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூரிலிருந்து ஆந்திர மாநில கரையோரப் பகுதிகள் வரை விறகு, உப்பு முதலியவை எடுத்துச் செல்ல இந்த படகு போக்குவரத்து நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே, கூவத்தைப்பற்றி நான் சொல்லிவிட்டேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, வேதாரண்யம், பக்கிங்காம் கால்வாய்களை இணைத்து படகு போக்குவரத்து அமைக்க வேண்டுமென்று முன்பு முடிவு செய்து அறிவித்தார்கள். அதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, அதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் விளக்கமாக பதில் கொடுக்க இயலும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, மைய உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்துக் கழகத்திடம் தமிழ் நாட்டில் நீர்வழி போக்குவரத்துக்கான தகுதி உள்ள திட்டம் தமிழக அரசு தந்துள்ளதா என்று கேள்வி இருக்கிறது. தமிழ் நாட்டில் ஆயிரம் கிலோமீட்டர் கடல் போக்குவரத்து உள்நாட்டில் இருப்பதின் காரணமாக கடல் வழி போக்குவரத்து பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் மூலம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்து, இருக்கக்கூடிய ஆறுகள், கடலில் கலக்கக்கூடிய பகுதிகள் அண்டை மாநிலங்களோடு தொடர்புடையதாக இருக்குமானால் அதில் போக்குவரத்துப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால், அதற்கான பதிலை சம்பந்தப்பட்ட அமைச்சர், போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

## சித்தமல்லி ஓடை நீர்த் தேக்கத் திட்டம்

*வினா எண். 449—திரு. பி. தங்கவேலு மற்றும் இரா. கருப்பையா : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் சித்தமல்லி ஓடை நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்பொழுது துவங்கப் பெறும் ?